[பேரவைத் தலைவர்] [1996 மார்ச் 1

20-2-1996 அன்று வேதாரண்யம் கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பிரச்சினை பற்றிப் பேரவையில் எழுப்பி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். *(குறுக்கீடுகள்)*

(ஆ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அது அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை. நீங்கள் அறையில் வந்து என்னிடத்தில் ஓரலாகக் கேட்டீர்கள். கேட்டதற்கு, அதை எழுப்ப முடியாது என்று சொல்லிவிட்டேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்பினால் அது அவைக் குறிப்பிலே இருக்காது. *(குறுக்கீடு)* நான் அனுமதி மறுத்திருக்கிறேன். விதி எண் 58-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள் *(குறுக்கீடு)* திரு. டேனியல்ராஜ் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் தடுக்க முடியாது. நான் உங்களைத் தடுக்கவில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. *(குறுக்கீடு)* அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. *(குறுக்கீடுகள்)* வேதாரண்யம் மீனவர்கள் பிரச்சினையை எடுத்து கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு.எஸ். டேனியல்ராஜ், திரு. மா. சுந்தரதாஸ், திருமதி ஏ.எஸ் பொன்னம்மாள், திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், திருமதி ஜெ. லோகாம்பாள், திரு. பி.வி. இராஜேந்திரன் மற்றும் திரு.ப. ரங்கநாதன் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) நாகப்பட்டினம் கடல் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேதாரண்யம் கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள பிரச்சினை பற்றிப் பேரவையில் எழுப்பி, பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. எஸ். டேனியல்ராஜ்,

திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருந்தனர். அதை இன்று எடுத்துக் கொள்வதற்கு நான் ஒப்புதல் அளித்திருக்கிறேன். அதை இப்போது பேரவையில் எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி, என்ன? (குறுக்கீடு) கிளாரிபிகேஷனுக்கு இப்போது ஒன்றும் அவசியமில்லை. கிளாரிபிகேஷன் என்பது பேரவை நடவடிக்கைகள் நடைபெறும்போது அதிலே கிளாரிபிகேஷன் கேட்கலாம். ஆரம்பிக்கும்போதே கிளாரிபிகேஷன் என்று, பூஜ்யத்தில் போய் கிளாரிபிகேஷன் கேட்கிறீர்களே? பூஜ்யத்தின் மீதே உங்களுக்குப் பெரிய நாட்டம் இருக்கிறது என்று தெரிகிறது. உட்காருங்கள் (குறுக்கீடு) ஒழுங்குப் பிரச்சினை அல்லது கிளாரிபிகேஷன் என்பது பேரவை நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கிறபோது, அந்தச் சம்பவங்கள் மீது எழுப்பப்படுவது. ஒன்றுமே இன்னும் ஆரம்பிக்காதபோது, முன்னரேயே கிளாரிபிகேஷனோ, ஒழுங்குப் பிரச்சினையோ வராது. உட்காருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் வேதாரண்யம் மீனவர்கள் பிரச்சினை பற்றி எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே கொடுத்துள்ள சில பிரச்சினைகள் பற்றி அனுமதி மறுக்கப்பட்டிருக்கலாம். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, என்ன பிரச்சினை? ஈ.பி.யிடம் அதனுடைய விளக்கம் கேட்டிருக்கிறேன். வந்தவுடன் தருகிறேன். (குறுக்கீடு) திரு. பரிதி, இன்னும் உங்களுடைய பதவிக்காலம் எல்லாம் இருக்கிறது. உங்களுக்கு அவையெல்லாம் அனுப்பி வைக்கப்படும். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

முற்பகல் 11-40

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நீங்கள் கொடுத்த பிரச்சினை பற்றி இங்கே எழுப்பப்பட்டு அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். பதில் சொன்ன பிரச்சினையைப் பற்றி மீண்டும் மீண்டும் எழுப்பிக் கொண்டிருக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் பேசவிடுங்கள் (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசட்டும். திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஜி. பழனிசாமி, திரு. வே. தம்புசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது, 3 பேர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன். பல்வேறு உறுப்பினர்களிடமிருந்து பேரவை விதி 55-ன் கீழ் பல்வேறு அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) 3 பேர்களும் உட்காருங்கள். உங்களுக்குத்தான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வதாக அறிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி, பழனிசாமி நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளெல்லாம் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. துறைகளிடமிருந்து பதில்கள் கிடைத்துள்ளன. கிடைத்தவற்றை இன்று பேரவைக்கு வைத்து இருக்கிறேன். இன்னும் சில பதில்கள் வரவேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பாக நீங்கள் கொடுத்த அந்த அறிவிப்புகூட தற்போது பேரவை விதி 55-க்கு மாற்றப்பட்டு அதுவும் மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதுபற்றிய பதில் விரைவில் உங்களுக்கு சுற்றனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும், உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ், பேசுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

(இ) முன் அனுமதியின்றி பிரச்சினை எழுப்புதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, நீங்கள் அதுபற்றி எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. அறிவிப்புக் கொடுக்காமல் எதையும் எழுப்ப முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) மீனவர் பிரச்சினையை எடுத்திருக்கிறேன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசட்டும் (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது கொடுத்தீர்களா? எந்த அறிவிப்பும் கொடுக்காமல் இப்படி எழுந்து நின்று பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அதற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) விதிமுறைகள் இருக்கின்றன, உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் அவர்களை மீனவர் பிரச்சினையை எழுப்ப அனுமதித்து இருக்கிறேன், அவர் பேசட்டும், உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. தம்புசாமி, நீங்கள் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுக்கவில்லையென்றால் பின்னர் எப்படி எழுப்ப முடியும்? (குறுக்கீடு) திடீரென்று கேட்டால் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) இல்லை, நீங்கள் எத்தனை மணிக்குக் கொடுத்தீர்கள்? (குறுக்கீடு) 9.45-க்கு கொடுத்தீர்கள். (குறுக்கீடு) 9.37-க்கு என்னிடத்தில் சொன்னீர்கள், 9.45-க்குக் கொடுத்தீர்கள். அதை பின்னர்தான் எடுத்துக் கொள்ள முடியும். (குறுக்கீடு) விதிகளைப் படித்துப் பாருங்கள். நீங்கள் 9.45-க்குக் கொடுத்துவிட்டுக் கேட்பது சரியல்ல. நீங்கள் முறையாக அறிவிப்புக் கொடுத்துவிட்டுத்தான் கேட்கவேண்டும். (குறுக்கீடு) முறையான அறிவிப்புக் கொடுக்காமல் என்னை வந்து வற்புறுத்துவது சரியல்ல. (குறுக்கீடு) 3 பேரும் உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-45

அறிவிப்புக் கொடுக்காமலேயே நீங்கள் மூன்றுபேரும் இதுபோல் பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது சரியல்ல (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி இப்படிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் முறையாக அறிவிப்புக் கொடுத்திருந்தீர்களேயானால் பதில் சொல்வார்கள், உட்காரவேண்டும் (குறுக்கீடுகள்) கடைசி நாளில் முறைகேடாக நடப்பது சரியல்ல.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடாக நடக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.பழனிசாமி, திரு இளம்வழுதி, இரண்டு பேர்களும் உட்காருங்கள். முறைகேடு இல்லை என்று சொல்லுகிறீர்கள், என்ன முறையாக நடக்கிறீர்கள்? அறிவிப்புகள் கொடுக்காமலேயே நீங்கள் இரண்டுபேரும் நிற்கின்றீர்கள் (குறுக்கீடுகள்)

அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் 9.45 மணிக்குப் பின்னர் வந்து கொடுத்திருக்கிறார். 9.30 மணிக்கு முன்னாலேயே கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை இன்றே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தால் எப்படி? நான் பதில் பெற்றுத்தான் உங்களுக்கு அனுப்பி வைப்பேன். மூவரும் உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் மீனவர் பிரச்சினை குறித்துப் பேசுங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) நாகப்பட்டினம் கடல் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது குறித்து—தொடர்ச்சி.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த வேலாயுதம், நாகராஜன் கனகரத்தினம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் அறிவிப்பிலே என்ன கொடுத்திருக்கிறீர்கள்? 20-2-1996 அன்று வேதாரண்யம் கடல் பகுதியில் என்று கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இது உங்கள் கையெழுத்துதானே?

திரு.எஸ். டேனியல்ராஜ்: ஆமாம். நடந்தது நாகப்பட்டினத்தில்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உங்களுடைய கையெழுத்து, உங்களுடைய கடிதம், டைப் செய்யப்பட்டதுகூட இல்லை. திருத்திக்கொள்கிறேன் என்றாவது சொல்லுங்கள். திரு. இராஜேந்திரன் வேதாரண்யம் பகுதியில் ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லுகிறார்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் என்பதை நாகப்பட்டினம் என்று திருத்திக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள், வேலாயுதம்,நாகராஜ், கனகரத்தினம், லோகநாதன், தாம்புரெட்டி, திருவோணம் ஆகிய 6 பேரும் 21-ஆம் தேதி தோப்புத்துறைக்குத் தென் கிழக்கே 15 கிலோ மீட்டர் தூரத்தில் தங்கள் வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த ஒரு படகு திடீரென்று அங்கு வந்து இவர்கள் படகை நோக்கிச் சுட்டதில், துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 6 மீனவர்களும் படகுக்குக் கீழே பதுங்கியிருந்தால் தப்பித்துக் கொண்டார்கள்—ஆனால் படகின் மேல்புறம் கிட்டத்தட்ட சல்லடை போன்று துளைக்கப்பட்டுவிட்டது.

1996 மார்ச் 1] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

கடலில் மீன்பிடிக்கச் செல்கின்ற மீனவர்களை பல ஆண்டுக்காலமாக இலங்கை இராணுவத்தினர் பிடித்துச் செல்வதும், இலங்கை ராணுவத்தினர் நம்முடைய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதும் அன்றாட நிகழ்ச்சியாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடலுக்குச் செல்கின்ற நம்முடைய மீனவர்கள் உயிரோடு திரும்பி, தப்பி வருவார்களா என்ற நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்த வரையிலே தூத்துக்குடிக்கும், நாகப்பட்டினத்திற்கும், அங்குள்ள மீனவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, மீனவர்கள் கடலிலே மீன் பிடிக்கச் செல்கின்ற நேரத்திலே அங்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் கரையிலே உள்ள மீன் துறை இலாக்காவிற்கு அதைத் தெரிவிக்கின்ற வகையிலே வாக்கி டாக்கிகளை எல்லாம் மாநில அரசுக்குக் கொடுத்துள்ளது. ஆனால் இதுவரையில் அந்த மீனவர்களுக்கு வாக்கிடாக்கிகள் வழங்கப்படவில்லை. அது ஒரு காரணமாகும். அடுத்து, கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையிலே அங்கே ஒரு டி.ஐ.ஜி. தலைமையிலே மெரைன்-போர்ஸ் ஒன்று அமைத்து மீனவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே ரோந்துப் படகுகளை அவர்கள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலும் அதுபோல அதிகமான எண்ணிக்கையில் ரோந்துப் படகுகளை அனுப்பும் வகையில் ஒரு டி.ஐ.ஜி. தலைமையில் மெரைன்-போர்ஸ் அமைக்கப்படவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையில் கடல் எல்லையைக் கண்டுபிடிப்பதற்காக மிதவை வழிகாட்டிகளை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். அதைப்போல குறைந்தபட்சமாக நாகப்பட்டினம் முதல் ராமேஸ்வரம் இடையிலுள்ள எல்லை வரை இலங்கை ராணுவத்திடமிருந்து நம்முடைய மீனவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே கடல் எல்லையை மீனவர்கள் கண்டுகொள்ளும் வகையிலே மிதவை வழிகாட்டிகளை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டேனியல்ராஜ் அவர்களைப் போன்றே, திரு. ஞானசேகரன் அவர்களும் வேதாரண்யம் என்றே கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடு)*

திரு. சி. ஞானசேகரன்: அவ்வாறே திருத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்திக் கொண்டால் சரி. திரு. தாமரைக்கனி அவர்களும் அவ்வாறாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகைகளை மட்டும் பார்த்துவிட்டு கொடுக்கக்கூடாது என்று நான்

சொல்வதற்கு இதுதான் காரணம். (குறுக்கீடு) உட்காருங்கள். துணைத் தலைவர் பேசிய பிறகு அக்கட்சி உறுப்பினருக்கு அனுமதி இல்லை. (குறுக்கீடு) கட்சித் தலைவர் பேசியபிறகு உறுப்பினருக்குக் கொடுப்பது இல்லை. திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் கடற்கரைப் பகுதியில் நமது கடற்கரை எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நமது மீனவர்கள்மீது இலங்கை ராணுவப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். நமது மீனவர்கள் உயிர் பிழைத்த வண்ணம் அந்தப் பகுதியிலுள்ள நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார்கள். இப்படி நமது தமிழக மீனவர்களைக் கடத்திச் செல்வதும், துப்பாக்கி முனையில் மிரட்டுவதும் வாடிக்கையாக நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு இறுதி முடிவு காண வேண்டியது மத்திய சர்க்கார்தான். மாநில சர்க்கார் பல தடவை—மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களும் பல தடவை டெல்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் இதுகுறித்து வலியுறுத்தியுள்ளார்கள். **அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. தமிழக மீனவர்களின் பிரச்சினையை, வாழ்க்கைப் பிரச்சினையைக் கவனிக்காமல், வேறு பிரச்சினைக்கு 'ஹவாலா' போன்ற மோசடி பிரச்சினைகளிலெல்லாம் அவருடைய கவனத்தை செலுத்துகிறாரே தவிர தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் பிரச்சினையில் அவர் கவனம் செலுத்தவில்லை. ஆகவே (குறுக்கீடு).

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதை ** என்கிறார்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: ** என்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று இருந்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி:** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சீக்கரம் பேசி முடிங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ** சொல்லவில்லை. மத்திய அரசு செயலற்றுப்போய் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1996 மார்ச் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் மாற்றிக் கொண்டு விட்டார், உட்காருங்கள். வேதாரண்யத்தை நாகப்பட்டினம் என்று மாற்றிக் கொண்டது போல இதையும் இவர் மாற்றிக் கொண்டுள்ளார். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. இரா. தாமரைக்கனி, சீக்கரம் பேசி முடியுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ஆகவே, ஆக்கபூர்வமான ஒரு முடிவை மத்திய அரசு எடுப்பதற்கு தமிழக அரசு மீண்டும் வலியுறுத்துமா? கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்காக மிகவும் வேகமாகச் செல்லக்கூடிய விசைப்படகுகள் வாங்கப்படும் என்று சொன்னார்கள். அதை மத்திய அரசு வாங்குமா? எத்தனை விசைப்படகுகள் தமிழக மீனவர்களைக் காப்பாற்ற (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: அரசு மேல் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராமையன் என்பவரின் மகன் திரு. தங்கராஜ் என்பவரின் டி.கே.சி. 747 என்று எண்ணுள்ள விசைப்படகு 20-2-1996 அன்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றது என்றும், கடலில் வேதாரண்யம் வட்டம் ஆள்காட்டுத் துறைக்கு கிழக்கே சுமார் 10 கிலோமீட்டர் தூரத்தில் 21-2-1996 அன்று காலை 8.30 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கையைச் சேர்ந்த 9 படகுகள் மேற்சொல்லப்பட்ட டி.கே.சி. 747 என்ற எண்ணுள்ள விசைப் படகை துப்பாக்கியால் சுட்டனர் என்றும், படகிலிருந்து தமிழக மீனவர்கள் தங்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள, படகில் 'டெக்கில்' படுத்து விட்டனர் என்றும், அதனால் அவர்களுக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், பின்னர் மேற்சொன்ன டி.கே.சி. 747 ஆம் எண்ணுள்ள படகின் அருகே இலங்கைப் படையினர் வந்தனர் என்றும், அவர்களுடைய படகிலே இருந்த 'ஐஸ் பெட்டியைத்' திறந்து அதிலிருந்து மீன்களை எடுத்துக் கொண்டு தமிழக மீனவர்களை விரட்டி விட்டனர் என்றும் மீன் துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி சம்பவம் நடந்த பின்பு தமிழக மீனவர்களின் படகும் மற்றும் தமிழக மீனவர்களும் உடனடியாக பாதுகாப்பாக கரை சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி படகை இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டதால் ஏற்பட்ட சேதங்கள் படகின் பலகையில் உள்ளன. மேற்படி சம்பவம் குறித்து

மீனவர்கள் 26-2-1996 அன்று பிற்பகல் நாகப்பட்டினம் மீன் துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் தெரிவித்துள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் சில கருத்துக்களைச் சொன்னார்கள். தெரிந்தோ, தெரியாமலோ கடலில் நம்முடைய மீனவர்கள் பிடிக்கச் செல்லும்போது தவறி விடுவது உண்டு. இதனைத் தவிர்க்கின்ற வகையில் மிதவை வழிகாட்டிகள் அமைக்க வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். மிதவை வழிகாட்டிகள் அமைக்க வேண்டுமென்றால் அதனைச் செய்யவேண்டியது மத்திய அரசு. நம்முடைய கடற்கரை என்று வரும்போது, ஆயிரம் கிலோமீட்டர் தூரமுள்ள நம்முடைய கடற்கரைக்கு மிதவை வழிகாட்டிகள் அமைக்க வேண்டுமென்றால் மிகுந்த செலவு ஏற்படும். செலவு ஏற்படுவது மட்டுமல்லாமல், அதனை அமைக்க மத்திய அரசிடம்தான் அதிகாரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசிடத்திலே அதனை வலியுறுத்தி அதனைச் செய்தால் மிகவும் மகிழ்ச்சியுடையவர்களாக நாம் இருப்போம். அதே நேரத்திலே ஒவ்வொரு சம்பவம் ஏற்படும்போதும், எந்த அளவுக்கு நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தின் முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான கண்டனத்தை இலங்கை அரசுக்கும், மத்திய அரசுக்கும் தெரிவித்து, மத்திய அரசு இதில் எந்த அளவுக்குக் கடமையாற்ற வேண்டுமென்பது குறித்தும் பலமுறை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பாரதப் பிரதமரிடத்திலே, நேரிலே எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, மத்திய அரசுதான் தொடர்ந்து இதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 11-55

அதேபோன்று, நம்முடைய மீனவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அதிநவீனப் படகுகள் — Petrol Boats — வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை உறுப்பினர் திரு. டேனியல்ராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், அதி நவீனப் படகுகளை — Marine Fishing Regulation Act என்று இருக்கிறது. அதாவது கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் உள்ள பிரச்சினைகளைப் போக்குவதற்காக 1983-லே இயற்றப்பட்ட Marine Fishing Regulation Act-னை ஸ்டிரிக்ட்டாக என்போர்ஸ் செய்வதற்கு-ஒவ்வொரு படகும் 90 இலட்சம் ரூபாய் செலவிலே வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அந்தப் பணியோடு, காணாமற்போகின்ற மீனவர்களைத் தேடுகின்ற பணியிலும் அந்தப் படகுகள் ஈடுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1996 மார்ச் 1] [திரு. டி. ஜெயகுமார்]

அடுத்து, `வாக்கி-டாக்கி'யைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரையில், பரிட்சார்த்த முறையாக தூத்துக்குடியிலும் நாகப்பட்டினத்திலும் 125 மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுமையிலும் இருக்கின்ற துறைமுகங்களுக்கு அது கொடுக்கப்படவேண்டும். தமிழகம் முழுமையிலும் இருக்கின்ற துறைமுகங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற நம்முடைய கருத்தை மத்திய மீன்வள வாரியக் கூட்டத்திலே தெரிவித்து இருக்கிறோம். அதற்கு மத்திய அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது அந்த இரண்டு துறைமுகங்களில் உள்ள மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிட்சார்ந்த முறையிலே அது செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அதிலே விவாதம் எல்லாம் இருக்க முடியாது.

(ஆ) ஸ்ரீவைகுண்டம் தொகுதி தாமிரபரணி ஆற்றில் மண் எடுக்கப்படுவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. ஸ்ரீவைகுண்டம் தொகுதி தாமிரபரணி ஆற்றில் மண் எடுக்கப்படுவதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து திரு.எஸ்.டேனியல்ராஜ் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று கோரி உள்ளார்கள். அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. திரு.எஸ் டேனியல்ராஜ்.

திரு. எஸ்.டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலே தாமிரபரணி ஆற்றில் கடந்த 20 ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து மணல் எடுக்கப்பட்டு வருகின்ற நிலை இருந்து வருகிறது. தற்போது சில தனியார்கள் தாமிரபரணி ஆற்றிலும், ஆற்றினுடைய கரையிலும் இருந்து தினசரி 100-க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் மணல் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக தாமிரபரணி ஆற்றிலே, ஆற்றின் ஆழம் அதிகமாகி, இன்றையதினம் நீர்மட்டம் குறைந்து, நிலத்தடி நீர் குறைவாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலை சிதம்பரனார் மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இப்போது, தாமிரபரணி ஆற்றிலேதான் வாழவல்லான் 3 எம்.ஜி.டி. குடிநீர் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய கிணறும், பம்ப் ரூமும்